தினகரன்
செப்டம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை

### தேர்வு கட்டுப்பாட்டாளர் உட்பட

# ஜிப்மரில் 12 பதவிகளுக்கு விண்ணப்பம் வரவேற்பு

புதுச்சேரி, செப். 24: ஜிப்மர் தேர்வு கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட 12 பதவிகள் டெபுடேஷன் அடிப்படையில் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

ஜிப்மர் புதுச்சேரி மற்றும் காரைக்கால் கிளையில் பல்வேறு குருப் பி, சி பணியிடங்கள் டெபுடேஷன் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. அதன்படி, புதுச்சேரி ஜிப்மரில் தேர்வு கட்டுப்பாட்டாளர்-1, முதுநிலை கணக்கு அலுவலர்-1, சிஸ்டம் அனலிஸ்ட்-2, உதவி இயக்குநர்-1, கம்ப்யூட்டர் புரோக்ராமர்-1, கொள்முதல் அலுவலர்-1, உதவி பதிவாளர்-1 என 8 பதவிகள், காரைக்கால் ஜிப்மரில் கம்ப்யூட்டர் புரோக்ராமர்-1, கணக்கு அலுவலர்-1, உதவி பதிவாளர்-2 என 4 பதவிகள் என மொத்தமாக 12 பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த பதவிகளுக்கான கல்வி தகுதி, வயது வரம்பு, ஊதிய விவரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களுக்கு www.jipmer.edu.in என்ற இணையதளத்தை பார்க்கவும். ஜிப்மர் இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதவிறக்கம் செய்து, அதனை பூர்த்தி செய்து வருகிற நவம்பர் 18ம் தேதி மாலை 5.30 மணிக்குள் ஜிப்மர் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு ஏதேனும் கேள்வி இருந்தால் 0413-2296022 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.